# கலாநிதி சிரான் தெரணியகல: இலங்கையில் வடக்கையும் தென் திசையும் இணைத்த தொல்பொருள் ஆய்வாளர்

**ஒய்வு பெற்ற சிரேஷ்ட பேராசிரியர் பீ. புஷ்பரத்தினம்**
வரலாற்றுத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், ஸ்ரீ லஙகா

# Dr. Siran Deraniyagala: The Archaeologist who Connected North and South Sri Lanka

**P. Pushparatnam**

Retried Senior Professor, Department of History, University of Jaffna, Jaffna, Sri Lanka

Translator
**Bhagya Dilhani Mabulage**
Assistant Lecturer, Department of Sinhala and Mass Communication, University of Sri Jayewardenepura, Sri Lanka.

கலாநிதி சிரான் தெரணியகல அவர்கள், சமகால தெற்காசிய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இடையே மிகவும் புகழ்பெற்ற தொல்பொருள் ஆய்வாளர் ஒருவர். கடந்த 50 ஆண்டுகளாக, பல தேசிய மற்றும் சர்வதேச அறிஞர்களுடன் இணைந்து சிரான் தெரணியகல அவரகளால் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆய்வுகள் மற்றும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட அவரது முடிவுகள், இலங்கையின் பண்டைய மக்கள் மற்றும் கலாசாரம் தொடர்பாக நம்ப முடியாத நுண்ணறிவை வழங்கியுள்ளன. கலாநிதி சிரான் தெரணியகல அவர்களால் பூர்வ வரலாறு மற்றும் முந்தைய வரலாறு தொடர்பான ஆய்வுகள் மூலம் அறிமுகப் படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சி முறைகள் இலங்கை தொல்லியல் துறைக்கு சர்வதேச மதிப்பைக் பெற்றுக் கொடுத்தன.

ANCIENT LANKA

*Volume 1 (2022): Siran Deraniyagala Commemoration Volume*

© 2022 by the author/s. doi:xxxx
This is an open access article distributed under the terms and conditions of the Creative Commons Attribution CC BY 4.0

ஒரு சிறந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளராக, கலாநிதி சிரான் தெரணியகல அவர்களது கள ஆய்வுப் பயிற்சிகள் நெதர்லாந்து, இந்தியா, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்டது. அவர் இலங்கையில் 20க்கும் மேற்பட்ட தேசிய மற்றும் சர்வதேச திட்டங்களுக்கு தலைமை தாங்கியுள்ளார். கலாநிதி சிரான் தெரணியகல அவரகளால் இரணமடு மண்மேடுகள், தாழ்நிலப் பாறைகள் வாழ்விடங்கள் மற்றும் இலங்கையின் பூர்வ வரலாற்றிடங்களான அனுராதபுரம் மற்றும் கந்தரோடை போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு கல்வியாளராக, அவர் முன்னணி கல்வியியல் சஞ்சிகைகள் மற்றும் இதழ்களில் 40க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். அத்துடன் அவர், கலாசார அலுவலகள் அமைச்சு மற்றும் தொல்பொருள் திணைக்களம் ஆகியவற்றில் பல முக்கிய பதவிகளை வகித்துள்ளார். கலாநிதி சிரான் தெரணியகல அவர்கள் 1968 இல் இலங்கை தொல்பொருள் திணைக்களத்தின் உதவி ஆணையாளராகவும், 1992 - 2001 வரை தொல்லியல் பணிப்பாளர் நாயகமாகவும் கடமையாற்றிய காலப்பகுதியில் இலங்கையின் புராதன வரலாற்றின் மீள் வாசிப்பை ஆரம்பித்த பெருமைக்குரியவர். கலாநிதி சிரான் தெரணியகல அவர்களின் கண்டுபிடிப்புகள் நிச்சியமாக இலங்கையின் வரலாறுப் பற்றிய பல ஆய்வுகளுக்கு வழிவகுத்துள்ளன.
கலாநிதி சிரான் தெரணியகல அவர்கள், இரத்தினபுரியை வசிப்பிடமாகக் கொண்டவரும் தொல்பொருளியல் துறையில் ஆர்வம் கொண்ட தலைமுறையிலிருந்தும் வந்தவர். அவரது தாத்தா கலாநிதி போல் ஈ. பீரிஸ், ஒரு சிறந்த வரலாற்றறிஞர். கலாநிதி போல் ஈ. பீரிஸ் யாழ்ப்பாணத்தில் நீதிபதியாக இருந்த காலத்தில் (1917இல்) யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள கந்தரோடையை, அனுராதபுரத்தைப் போன்ற ஒரு ஆரம்பகால வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக அங்கீகரித்தார்.

இந்த இடத்தில் முதன்முதலில் அகழ்வாராச்சிகளை மேற்கொண்டவர் இவராவார். அவ்விடத்தில் பௌத்த மடாலய வளாகம் மற்றும் தொல்லியல் பொருட்களை கண்டெடுத்தார். அத் தொல்பொருட்கள் தற்போது யாழ்பாணத்தில் அமைந்துள்ள தொல்பொருள் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. கலாநிதி சிரான் தெரணியகல அவர்களது தந்தை கலாநிதி பீ. ஈ. பீ. தெரணியகல பல துறைகளிலும் சிறந்த விளக்கியவர். அவர் இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள சில இரத்தினச் சுரங்கங்களை அண்மித்த பகுதிகளில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சிகளில் பல்வேறு விலங்குகளின் புதைபடிவங்களை முதன்முதலில் கண்டுபிடித்தார். இந்த கண்டுபிடிப்புகள் இரத்தினபுரி கலாசாரத்திற்கு உரிமையாக்கப்பட்டன.

தனது தந்தையின் அடிச்சுவடிகளைப் பின்பற்றி கலாநிதி சிரான் தெரணியகல அவர்கள் இலங்கையின் ஆரம்பகால கற்காலக் கருவிகள் தொடர்பாக விஞ்ஞான மற்றும் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு இந்நாட்டின் முந்தைய வரலாறு: ஒரு சூழவியல் பார்வை (1992) என்ற தலைப்பில் கல்வி ஆய்வுக் கட்டுரை வெளியிட்டார். இது இலங்கையின் முந்தைய வரலாறு தொடர்பாக விரிவான ஆய்வுக் கட்டுரையாகும். அத்துடன் இது இலங்கையின் ஒரு முக்கிய வெளியீடாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையில் பீட உறுப்பினராக எனக்கு, கலாநிதி சிரான் தெரணியகல அவர்களுடன் 2000 ஆண்டில் இருந்து அவரது மறைவு வரை ஒரு நெருக்கமான தொழில்சார் உறவு இருந்தமை ஒரு பாக்கியமாகும்.

பல சந்தர்ப்பங்களில், எங்கள் பீட உறுப்பினர்கள் கலாநிதி சிரான் தெரணியகல அவர்களுடன் இணைந்து தொல்பொருள் ஆய்வுகள் மற்றும் அகழ்வாராய்ச்சிகளில் பங்கேற்றர். கலாநிதி சிரான் தெரணியகல அவர்கள், அப்போதைய தொல்பொருள் பணிப்பாளர் நாயகமான கலாநிதி செனரத் திஸாநாயகவுடன் இணைந்து, இலங்கையின் வடக்குப் பகுதியில் தொல்பொருள் ஆராய்ச்சிகளை விரிவுபடுத்தும் நோக்கில் 2010இல் யாழ்ப்பாண பிராந்திய தொல்பொருள் திணைக்களத்தை அமைப்பதில் பணியாற்றினார். இந்த பிராந்திய தொல்பொருள் திணைக்களம் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, கலாநிதி சிரான் தெரணியகல அவர்கள், இலங்கையின் தொல்பொருள் ஆய்வுத் துறைக்கு தலைமை தாங்கி, தென்னிலங்கையில் மட்டுமன்றி வட இலங்கையிலும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களுடன் இணைந்து பணியாற்றினார். 2011 இல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்பொருளியல் மற்றும் வரலாற்றுத் துறைகளைச் சேர்ந்த, மாணவர்கள் மற்றும் ஆசியர்கள், கலாநிதி சிரான் தெரணியகல அவர்களின் தலைமையில் தொல்லியல் திணைக்களத்துடன் இணைந்து, முந்தைய இரும்பு யுகங்களில் மிக முக்கிய ஆய்வு பிரதேசங்களுல் ஒன்றான கந்தரோடையில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டனர். கந்தரோடை அகழ்வாராய்ச்சியின் இறுதிக் கட்டத்தில், கலாநிதி சிரான் தெரணியகல மற்றும் பிரதி

தொல்லியல் பணிப்பாளர் கலாநிதி நிமல் பெரேரா ஆகியோர், அதன் ஆய்வு முடிவுகளின் முக்கியத்துவம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துக் தெரிவித்தனர். அது வடக்கிலங்கையின் பண்டைய தொல்லியல் மரபுரிமைகளை அடையாளப் படுத்திய தருணமாக அடைந்தன.

கலாநிதி சிரான் தெரணியகல அவர்கள், 2001 இல் பணிப்பாளர் நாயகப் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற போதிலும் தனது 79 வது வயது வரை இலங்கை தொல்பொருள் ஆய்வுத் துறையின் பிரதம ஆலோசகராகப் பணியாற்றினார். அவர்கள் தனது 50 வருட தொல்லியல் வாழ்க்கையில் பல தொல்பொருள் இடங்களைக் கண்டுபிடித்த பெருமைக்குரியவர். அத்துடன் அவருக்குப் பின் வந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பலருக்கும் வழிகாட்டினார். கலாநிதி சிரான் தெரணியகல அவர்களின் மறைவு ஒரு பாரிய இழப்பாக இருப்பினும், அவரது பெயரும், பணியும் எப்போதும் நிலைத்திருக்கும்.

Dr. Siran Deraniyagala is one of the most well-known archaeologists among contemporary South Asian archaeologists. Over the past 50 years, his archeological studies in collaboration with many scholars nationally and internationally, and his conclusions based on them, have provided incredible insights to Sri Lanka's ancient people and culture. The modern technologies and scientific research methods introduced by Dr. Siran Deraniyagala in the study of prehistory and protohistory brought international appreciation of Sri Lankan archeology.

An accomplished field archaeologist, his field training was carried out in countries such as the Netherlands, India, France and England. He has directed more than 20 national and international projects in Sri Lanka. I specifically highlight the archaeological excavations Dr. Siran Deraniyagala carried out at Iranamadu Formation sites, lowland rock shelter sites and Early Historic sites of Sri Lanka such as Anuradhapura and Kantharodai. As a scholar, he published over 40 research articles in leading academic journals and volumes. He also held several high-profile key positions in the Ministry of Cultural Affairs and the Department of Archaeology. During his tenure as Assistant Commissioner of the Archaeological Department of Sri Lanka in 1968 and as Director General of Archeology from 1992-2001 he initiated the re-reading of ancient history of Sri Lanka. The discoveries of Dr.Siran Deraniyagala undoubtedly paved the way for many studies on the history of Sri Lanka.

Dr. Siran Deraniyagala, a resident of Ratnapura, comes from generations dedicated to archaeology. His grandfather Dr. Paul E. Peiris was an eminent historian. During his tenure as a judge in Jaffna, in 1917, Dr. Paul E. Peiris first recognized the historical importance of Kantharodai in the Jaffna peninsula as an Early Historic site similar to Anuradhapura. It was he who first excavated the site, which was a Buddhist monastic complex and recovered antiquities, currently housed in the archaeological museum in Jaffna. Dr. Siran Deraniyagala's father Dr. P.E.P Deraniyagala was a leading personality who excelled in many fields. He first discovered several sites with stone artifacts in the gem-bearing gravel, from the same horizons as those which had yielded the Ratnapura fossil fauna. These finds were accordingly assigned to the Ratnapura culture. Following in his father's footsteps, Dr. Siran Deraniyagala shed new light on the

prehistory of Sri Lanka by conducting scientific and comprehensive studies on early stone tools of Sri Lanka. The main outcome of his research was the publication of his monograph entitled The *Prehistory of Sri Lanka: an Ecological Perspective* (1992). It was the comprehensive treatise to emerge on the prehistory of Sri Lanka and it proved to be a landmark publication.

As a faculty member at the Department of History, University of Jaffna I was very fortunate to maintain a strong professional relationship with Dr. Siran Deraniyagala from the year 2000 until his demise. On several occasions, our faculty members participated in archeological explorations and excavations alongside him. Dr. Siran Deraniyagala collaborated with the then Director General of Archeology, Dr. Senarath Dissanayake, in setting up the Regional Department of Archeology in Jaffna in 2010 with the aim of expanding archeological research in the north of Sri Lanka.

Following the establishment of this Regional Department of Archeology, Dr. Siran Deraniyagala led the Archaeological Survey of Sri Lanka to work with archaeologists and students not only in southern Sri Lanka but also in Northern Sri Lanka. In 2011, the students and staff of the archaeology, Department of History, University of Jaffna carried out archaeological excavations in collaboration with the Archaeology Department, headed by Dr. Siran Deraniyagala at one of the most significant Early Iron Age sites in the north, Kantharodai. At the closing stages of the Kantharodai excavation, Dr. Siran Deraniyagala and Dr. Nimal Perera, Deputy Director of Archeology, spoke to the media about the significance of the results. It was a very important moment for Sri Lankan archaeology where the ancient heritage from the north of Sri Lanka was highlighted.

Although Dr. Siran Deraniyagala retired from the post of Director General in 2001, he served as the Chief Advisor of the Archaeological Survey of Sri Lanka until his demise at the age of 79. He is credited with discovering many archeological sites in Sri Lanka during his 50 years of archeological research and for mentoring many archaeologists who can carry on the work after him. Dr. Siran Deraniyagala's demise is a loss to all, but his name and work will remain with us forever.

(Original submission in English, translated to Tamil)